**ஏறாவூர் நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

----------------------------------

1 **நிதிக்கூற்றுகள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ளிஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு**

உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 417,285 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | **விடயங்கள்** | **பெறுமதி (ரூபா)** | **சான்றுகளின்மை** |
|---|---|---|---|
| (i) | காணி கட்டிடம் | 84,739,626 | காணி உரிமைப்பத்திரம் |
| (ii) | பொறித் தொகுதியும், இயந்திரங்களும் | 4,255,593 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 2,492,615 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (iv) | தளபாடம் பொருத்துகள் | 3,150,200 | நிலையான சொத்துப் பதிவேடு |

**1.3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

---

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255Mk; அத்தியாயம் 177(2) ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சுருக்கம் அடுத்துவரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2 நிதி மீளாய்வு**

---

**2.1 நிதி விளைவுகள்.**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,931,239 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 258,607 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ பலவீனம்**

---

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரின் கடன் நிலுவை ரூபா 18,395 தொகை நான்கு ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 ஒப்பந்த நிருவாகம்**

---

ஏறாவூர் நகரிலுள்ள ஒரு வீதிக்கு 71.2 கியூபிக் மீற்றர் அளவான கொங்கிறீட் இடப்பட்டிருந்த போதிலும் அவ் வீதிக்கு 79.38 கியூபிக் மீற்றர் அளவான கொங்கிறீட் இடப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு ரூபா 1,078,774 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததனால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 111,166 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

---

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடங்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 4.1 (ஆ) | பழுதடைந்த நிலையில் காணப்படும் உழவு இயந்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| 2015 | 3.2.3 | திரைப்பட மாளிகையிலிருந்து களியாட்ட வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| 2015 | 3.2.2 | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படாமை . |

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |